# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **D.A.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

விடுதலை! விடுதலை! என்று கத்தினோம் – வெள்ளையனை விரட்டுவதற்காக! என்று தணியும் இந்த சுதந்திரதாகம்? என்று ஏங்கினோம் 1947 வரை. அதன் பிறகு 'ஆடுவோமே, பள்ளு பாடுவோமே' என்று கூத்தாடினோம். ஆனால் அந்தக் கூத்தின் வேகத்திலே அடங்காமையை நீருற்றி வளர்த்து விட்டோம். பல விஷயங்களில், அடங்கிப் போவதும், அடிமைத்தளையும் சிறந்தது என்று வைணவம் போதிக்கிறது. 'அடியேன்' என்று கூறினால் 'நான் தங்களுக்கு தாஸன்' என்று பொருள். நம: என்று சொன்னால் 'நான் என்னுடையவன் அல்லேன்; தங்களுடையவன்' என்று அர்த்தம். அஷ்டாக்ஷரத்திற்குப் பொருள் பிரித்தால் நாம் அனைவரும் நாராயணனுக்கு அடிமை என்ற தாத்பரியத்தை உணர்வோம். தகப்பனுக்கு மகன் அடிமை, தமையனுக்குத் தம்பி அடிமை, தாய்க்குப் பிள்ளை அடிமை. குருவுக்கு சீடன் அடிமை என்று வைதிகமதம் வழி காட்டுகிறது.

இப்படி அடிமைப்பட்டுக் கிடப்பதில் தான் ஆத்மா உயர்வடைகிறதென்று ரிஷிகள் கண்டிருக்கிறார்கள். கட்டுப்பட்டு வாழும் வாழ்க்கை கணக்கில்லாத மேன்மைகளைத் தரும். அலெக்ஸாண்டரும், அரேபியரும், யுவாங்சுவாங்கும்,பாஹியானும், மூக்கில் விரல் வைக்கும் அளவு இந்தியா உலக அரங்கில் உயர்ந்திருந்தது என்றால் அந்த வெற்றியின் ரகசியம் இந்த அடிமைத் தளைதான். அடங்கிப் போகிறவன் ஆயிரம் சாதனைகளைச் செய்வான். அடங்காப் பிடாரிகள் காட்டுமிராண்டி சமுதாயத்தைத் தான் உருவாக்குவார்கள்.

இன்று மேலைநாடுகளில் மாணவன் ஆசிரியரை 'ஹாய்! ஜேம்ஸ்' என்று அழைத்து, தோளில் கை போடுகிறான். அதன் விளைவு, அந்த மாணவர்களுக்கு அறிவு வளர்ச்சி மிகவும் சுமாராகத்தான் இருக்கிறது என்கிறார்கள். அமெரிக்க நாட்டு விஞ்ஞானிகள் மற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கையில் சரிபாதிக்கு மேல் இந்தியர்கள்தான் கொடிக்கட்டிப் பறக்கிறார்கள். காரணம் அவர்கள் மாணவர்களாக இருந்தபோது குருவுக்கு சீடன் அடிமை என்கிற கோட்பாட்டை ஏற்றுக் கொண்டது தான். வெள்ளியும் தங்கமும் கொட்டிக் கிடக்கும் நாடுகளில் மூளை உழைப்பைக் காட்டி முன்னேறுகிறவர்கள் குருபக்தியை ஏற்றுக் கொண்ட இந்தியர்கள் தான்.

இதேபோல, நியாயமோ அநியாயமோ 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' என்று வாழ்ந்த ராமன் ஒரு ராமாயணம் உருவாவதற்கு காரணமாகி அதன் கதாநாயகனாக நின்றான். குருவுடைய உருவத்தை மண்பொம்மையாக்கி மண்டியிட்டு வணங்கிய ஏகலைவன் யாரும் கற்றுத் தராமலேயே வில்வித்தையில் முதல்வன் ஆனான். அண்ணனுக்கு அடங்கிய பரதனின் ஸ்ரீராமபாதுகா சாம்ராஜ்யம் ராமனுடைய ஆட்சியை விடச் சிறப்பாக இருந்தது என்று

வால்மீகி வர்ணிக்கிறார். அரசனுக்கடங்கிய மந்திரிகளும்,அவன் ஆணைக்கு அடங்கிய பிரஜைகளும் ''மனித நாகரீகத்தின் உச்ச கட்டம்'' என்று பிறர் புகழக் கூடிய அளவு ஒரு பொன்னான சமுதாயத்தை உருவாக்கி யிருந்தார்கள் என்று ப்ருஹத்ஸம்ஹிதையில் வராஹமிஹிரர் கூறுகிறார். பணியமாட்டேன் என்று எதிர்த்து நிற்பவர்கள், சாஸ்திரத்துக்கு அடங்காமல் சாகஸம் பேசுகிறவர்கள் இறுதியில் வீழ்ச்சியே அடைந்திருக்கிறார்கள். அது விலங்குகளின் பண்பு. நாய் குரைக்கிறது, புலி உறுமுகிறது, சிங்கம் கர்ஜிக்கிறது. அதனால் அவை விலங்குகளாகவே வாழ்கின்றன.

மனிதனை மனிதனாக்குவது நியாயங் களுக்குக் கட்டுப்படக் கூடிய அவனது குணம் தான். பலகால அனுபவத்தில் இன்னது நல்லது இன்னது தீயது என்று உணர்ந்த ஞானிகள் தான் சமுதாயச் சட்டங்களையும், மதச் சட்டங்களையும் ஸ்ம்ருதிகள் வடிவில் தந்தார்கள். குற்றம் செய்தவர் யாராக இருந்தாலும் அவர்களுக்குரிய தண்டனைக ளைத் தந்தார்கள். பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் கூட இப்படி தண்டிக்கப்பட்ட வரலாறுகள் புராணங்களில் நிறைய காணக் கிடக்கின்றன. அச்வத்தாமன் என்ற பிராம்மணனை கண்ணனும் வ்யாஸரும் சபித்தது இதற்கு ஒரு உதாரணம்.

பண்டைய சாத்திரங்களில் குற்றங் கண்டு பிடிப்பதை கொள்கையாகக் கொண்ட சிலர் பெண்ணடிமையை உண்டு பண்ணியது வைதிகமதம்தான்! என்கிறார்கள். பெண்களை அடிமைகளாக்க வேண்டுமென்று நம் முனிவர்கள் நினைத்திருந்தால் தாய்மார்கள் அனைவரும் தங்களுக்குப் பிறந்த ஆண் குழந்தைகளை அவர்கள் பிறந்த நாள் முதல் கால் தொட்டு வணங்க வேண்டும் என்று சட்டம் இயற்றி இருப்பார்கள். தமக்கைமார்கள் தம்பிமார்களை தொழுது நிற்க வேண்டும் என்று விதித்திருப்பார்கள். பாட்டிமார்கள் பேரன்மார்களுக்கு அடிமை செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருப்பார்கள். அரசனின் மனைவியாகிய அரசியைக்கூட, சேவர்களை வணங்கும்படி நியமித்திருப்பார்கள். ஆனால் நிஜம் அப்படி இல்லையே! தலை கீழாக அல்லவா இருக்கிறது? ஒருவன் சந்யாசி ஆக ஆனாலும், தன் தாயைப் பார்த்தால் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்க வேண்டும் என்று தானே இந்துமதம் கட்டளையிடுகிறது? பெண்களை அடிமைகள் ஆக்கவேண்டும் என்று நம் முன்னோர்கள் எண்ணி இருந்தால் ஆண்மகன் தவறு செய்தாலும் அது நியாயம் என்றும், பெண் நன்மை செய்தாலும் அது தவறு என்றும் சொல்லியிருக்க வேண்டும் அல்லவா? பிராட்டியில்லாமல் வைணவம் இல்லையே! ஆண்டாள் இல்லாமல் நாலாயிரம் இல்லையே! ராதை இல்லாமல் கண்ணன் இல்லையே! சீதையில்லாமல் ராமன் இல்லையே! இதைத் தானே நாம் படிக்கிறோம்.

அப்படியானால் எதிர்வாதக்காரர்களின் கோபமும் கொக்கரிப்பும் ஒரே ஒரு விஷயத்தைப் பற்றியதாகத் தான் இருக்க வேண்டும். அது என்னவென்றால் கணவனுக்கு மனைவி கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றவிதிமுறையைப் பற்றிதான் அவர்களுக்கு இவ்வளவு கொந்தளிப்பு ஆர்ப்பாட்டம். குடும்பத்துக்கும் நாட்டுக்கும் ஆண்மகனை முனிவர்கள் ஏன் தலைவன் ஆக்கினார்கள் என்பதற்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றை இதற்கு முந்தைய கட்டுரைகளில் எழுதியிருக்கிறேன். மீதியை பின்வரும் கட்டுரைகளில் எழுதப் போகிறேன். இந்தக் கட்டுரையில்

மருத்துவரீதியான ஒரு கருத்தை மட்டும் சொல்ல விழைகிறேன்.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் ஆணின் விந்தணுவில் XY என்ற குரோமோ சோம்கள் இருப்பதாகவும், பெண்ணின் சினை முட்டையில் XX குரோமோசோம்கள் இருப்பதாகவும் கண்டு பிடித்திருக்கிறார்கள். சினை முட்டையில் இருக்கும் கரு அணுக்களோடு ஆணின் X அணு சேர்ந்தால், பிறக்கும் குழந்தை பெண்ணாய் இருக்கும் என்றும், Y அணு சேர்ந்தால் பிறக்கும் சிசு ஆணாக இருக்கும் என்றும் ஆராய்ச்சி முடிவு சொல்கிறது. அதாவது பால் நிர்ணயம் (sex determination) ஆணுடைய விந்தணுவினால் தான் நிகழ்கிறது. இதை விளங்கிக் கொள்ள ஒரு சிறு உதாரணம் சொல்கிறேன். பூமியில் உள்ள மண்ணின் உரமும் சாரமும் நீரும் தான் எல்லா தாவரங்களையும் விளைவிக்கின்றன. மண்ணில் விழும் விதையோடு இவை சேரும் போது தான் ஒரு மரமோ, கொடியோ, செடியோ, புல்லோ, முளைக்கிறது.

ஆனால் அது இன்னமரம் இன்ன தாவரம் என்று நிச்சயிக்கப்படுவது (identifi-cation) மண்ணினால் அல்ல, விழும் விதையினால் தான். வேப்பம் விதை வேப்பமரட்தை உருவாக்குகிறது. ஆலம் விதை ஆலமரத்தை உருவாக்குகிறது. அதுபோல பெண்ணின் சினை முட்டையும் ஆணின் விந்தணுவும் சேர்ந்துதான் செல்பிரிவுப் பெருக்கம் (cell multilication) அடிப்படையில் சிசு உருவாகிறது என்றாலும் அதை இன்னக் குழந்தை என்று நிச்சயிப்பது ஆணின் விந்தணுக்கள்தான். பெண் விளைநிலம் என்றால் ஆண் விதையாகிறான்.

மருத்துவரீதியாக, பலகால ஆய்வின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த தத்துவத்தை தன் யோக மஹிமையாலும், ஞான திருஷ்டியினாலும் கண்டு உணர்ந்த நம் முன்னோர்கள் – அதாவது முனிவர்கள், மஹான்கள் – ஆணையே வீட்டுக்கும் நாட்டுக்கும் தலைவனாக்கினார்கள். ரகுவம்சம் என்று ஆணின் பெயரால் ஒருவம்சம் குறிக்கப்பட்டதே தவிர கௌசல்யா வம்சம் என்று பெண்ணின் பெயரால் சொல்லப்படவில்லை. உலகமதங்கள் அனைத்தும் இந்தக் கொள்கையைத்தான் பின்பற்றின. நம்மை ஆளவந்த ஆங்கிலேயரும் ஒரு குழந்தை தன் தந்தையின் பெயரையே முதல் எழுத்தாக (initials) பயன்படுத்தினர். இன்றுவரை அந்தப் பழக்கம் உலகெங்கும் இருக்கிறது.

வெளி உலகிலும், வீதிகளிலும் பெண்ணைக் கண்டு ஆண்கள் வாய்பிளப்பது போல, ஆணைக் கண்டு பெண்கள் சலனமடைவதில்லை என்பதால் பெண்களைக் கட்டுத் திட்டமாகப் பாதுகாத்து ஆண்மகனுக்கு அடங்கிய மனைவியாக அவளை நியமித்து சம்பாத்தியத்துக்காக ஆண்பிள்ளையை வெய்யிலில் அலைய விட்டானர். ஆனால் வீட்டின் நிர்வாகம் அனைத்தையும் மனைவியின் கையிலேயே ஒப்படைத்தனர். அதனால்தான் மனைவியை வடமொழியில் 'க்ருஹிணீ' என்றும் தமிழில் 'இல்லாள்' (இல்லத்தை ஆள்பவள்) என்றும் அழைத்தனர். இந்த விதியின் உண்மையை உணர்ந்தவர்கள் அனைவரும் இதற்கு கீழ்ப்படிந்தே நடந்தார்கள். அதனால் நாடும் வீடும் செழிப்புற்று இருந்தன. பழைய சட்டங்களை யெல்லாம் தகர்த்து எறிவதே பண்பாடு என்று நாம் ஒரு புது வாழ்க்கை முறையைட் தொடங்கியிருக்கிறோம். அதன் விளைவு என்ன என்பதை வள்ளுவர் கூறுகிறார், 'அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்'.